**Date**: 09.10.2020.

**அ.த.சா - 12 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 28.11.2011 தேதி சூலூர், ஒட்டர்பாளையம் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வந்தேன். சூலூர் வட்டாட்சியர் சாட்சியாக செல்லும்படி எழுத்து பூர்வமாக எதுவும் கொடுக்கவில்லை. இவ்வழக்கு சம்பந்தாக முதல் தகவல்அறிக்கையின் நகலை நான் பார்க்கவில்லை. 28.11.2011 தேதி நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் சென்றபோது என்னை போல் நிறைய அதிகாரிகளும், போலீசாரும் இருந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. 29.11.2011 தேதிமேற்படி அலுவலகத்திற்கு சென்ற போது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி. சண்முகப்பிரியா, அவர்கள் இருந்தார், அவரை தவிர அங்கிருந்த நபர்களை எனக்கு தெரியாது. Addl.S.P. அவர்கள் எழுத்து பூர்வமாக எனக்கு எதுவும் கொடுக்கவில்லை. கலைஞர் கருணாநிதி கல்லூரிக்கு செல்லும்போது எதற்காக செல்கிறோம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கல்லூரிக்கு சென்ற பிறகு தான் தெரியும். கல்லூரியை சோதனையிட போகிறார்கள் என தெரிந்து கொண்டேன். நாங்கள் அங்கு சென்றபோது கல்லூரியில் எத்தனை நபர்கள் அங்கிருந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தற்போது சரியாக ஞாபகமில்லை. நான் பணிபுரிந்து வந்த ஒட்டர்பாளையம் கிராம எல்லைக்குள் கலைஞர் கருணாநிதி கல்லூரி வரவில்லை. கண்ணம்பாளையம் கிராம எல்லைக்குள் வருகிறது. கண்ணம்பாளையம் கிராமத்திற்கென தனி கிராம நிர்வாக அதிகாரி அந்த சமயத்தில் பணிபுரிந்து வந்தார். கலைஞர் கருணாநிதி கல்லூரி ஒரு கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். கல்லூரிக்கு எதிரே விட்டு விட்டு வீடுகள் இருந்தன, தொடர்ச்சியாக இல்லை. கல்லூரியை ஒட்டி தோட்டமும், அதில் தோட்டத்து வீடுகளும் உள்ளன என்றால் நான் கல்லூரியின் சுற்றுசுவருக்கு வெளியே பார்க்கவில்லை. கல்லூரியின் அமைப்பு குறித்து வரைபடம் வரையவில்லை. பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 44 ஆவணங்கள் கைப்பற்றபட்டது குறித்து எழுதப்பட்டிருக்கிறது என்று என்னிடம் சொன்னார்கள், அதை நான் படித்து பார்க்கவில்லை. நான் பார்வை மகஜரில் 10,15 கையெழுத்துக்கள் செய்தேன், குறிப்பாக ஞாபகமில்லை. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்து அந்த இடத்தில் D.S.P.சந்திரமௌலி தாளாளரிடம் சொல்லிக்கொண்ட

விவரம் எனக்கு தெரியும். சோதனை ஜபீதாவில் நான் ஒரு கையெழுத்து தான் செய்தேன். சோதனை ஜபீதா எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் ஒரே பக்கத்தை கொண்டதாகும். அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு அதை ஜெராக்ஸ் எடுத்துவர சொல்லி காவலர் மூலம் அனுப்பி வைத்தார்கள். பின்னர் ஜெராக்ஸ் ஆவணங்களை வைத்துக்கொண்டு, அசல் ஆவணங்களை தாளாளரிடம் ஒப்படைத்துவிட்டார்கள். அவ்வாறு அசல் ஆவணங்களை தாளாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ExP12 ஆவணத்தில் குறிப்பிடபட்டதா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகமில்லை. Addl.S.P. விசாரணையில் மேற்கண்ட விவரத்தை சொல்லியுள்ளேன். முதல்விசாரணையில் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 28.11.2011 ம் தேதி நான் Addl.S.P. சண்முகப்பிரியாவை அவர் அலுவலகத்தில் சந்தித்தாகவும், மறுநாள் D.S.P.சந்திரமௌலி மற்றும் சாட்சிகளுடன் கலைஞர் கருணாநிதி கல்லூரிக்கு சோதனை செய்ய சென்றதாகவும், அங்கு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. Addl.S.P. அலுவலகத்தில் வைத்து நான் கையெழுத்துக்களை செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PW12

//உத்தரவுப்படி//

**SPL CC** – 80/2019

**Date**: 09.10.2020.

அ.த.சா - 11 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 28.11.2011 ம் தேதி கோயமுத்தூர் மதுக்கரையில் அறை எடுத்து தங்கியிருந்தேன். கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளரிடம், நான் வசித்து வந்த இடத்தின் முகவரியை சொல்லவில்லை. 3/138 கணபதி தெரு, சுப்பிரமணியபுரம், வெள்ளையானை கோட்டை போஸ்ட், சிவகிரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம், என்பது எனது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள, எனது முகவரி ஆகும். நான் 28.11.2011 ம் தேதியில் கோயமுத்தூர், மதுக்கரை தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளரிடமிருந்து 28.11.2011 ம் தேதி வேளாண்மை இணை இயக்குநர், அவர்களுக்கு கடிதம் வந்தது. வேளாண்மை இணை இயக்குநர், இவ்வழக்கில் சாட்சியாக செல்வதற்கு ஆதரவாக கடிதம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. வேளாண்மை இணை இயக்குநனருக்கு வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை நான் பார்க்கவில்லை. எனது அடையாளத்தை காண்பிக்கும், எழுத்துபூர்வமான ஆவணத்துடன் நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு முன்னிலையாகவில்லை. கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 28.11.2011 ம் தேதி நான் சென்ற பிறகு மீண்டும் எப்போது வரவேண்டும் என்று கடிதம் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் கடிதம் ஏதும் கொடுக்கவில்லை, வாய்மொழியாக 29.11.2011 தேதி காலை 5.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் முன்னிலையாக வேண்டும் என சொன்னார்கள். 28.11.2011 தேதி நான் கண்காணிப்பு அலுவலகம் சென்றிருந்த போது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி. சண்முகப்பிரியா, அவர்கள் இருந்தார்கள். மேலும் சிலர் இருந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் திருமதி. சண்முகப்பிரியாவிடம் எனது அடையாள அட்டையை காண்பித்தேன். 29.11.2011 ம் தேதி நான் சென்றபோது Dy.S.P.சந்திரமௌலி என்பவரை, திருமதி. சண்முகப்பிரியா, மேடம் அவர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அப்போது மேலும் சிலரும், பெண் காவலர்களும் அங்கிருந்தார்கள். Dy.S.P.சந்திரமௌலி, அவர்கள் என்னையும், கிராம

நிர்வாக அலுவலகர் அறிவழகன் அவர்களையும் ஒரு இடத்திற்கு செல்லவேண்டுமென கூறி அழைத்துகொண்டு சென்றார்கள். அவ்வாறு போகும் வழியில் தான், கலைஞர் கருணாநிதி கல்லூரிக்கு செல்லுகிறோம் என்ற விவரத்தை Dy.S.P. சொன்னார். அந்த கல்லூரிக்கு அதற்கு முன்பாக நான் சென்றதில்லை. அங்கு சோதனை செய்து 44 ஆவணங்கள் கைப்பற்றதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் என்ன என்ன ஆவணங்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், 10 வருடங்களாகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை. கல்லூரி எந்த திசை பார்த்து உள்ளது என்றால், அது குறித்து தற்போது ஞாபகமில்லை. அந்த ஆவணங்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பது குறித்து சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும், நிர்வாக அறை, தாளாளர் அறை, முதல்வர் அறை ஆகிய அறைகளில் இருந்து எடுத்தார்கள். ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது சம்பந்தமாக வரைபடம் வரைந்தார்களா என்றால் ஞாபகமில்லை. நாங்கள் மொத்த 6 நபர்கள் சோதனைக்கு சென்றிருந்தோம், கல்லூரியில் முதல்வரும், தாளாளரும் இருந்தார்கள். மொத்த எத்தனை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் ஒரே ஒரு மகஜர் தான் தயார் செய்தார்கள். நான் எத்தனை எண்ணிக்கையிலான கையொப்பங்களை செய்தேன் என்றால் சுமார் 10 க்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான கையொப்பங்களை செய்தேன். கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விவரத்தை எனக்கு படித்து காண்பித்தார்கள், ஆனால் அந்த ஆவணங்கள் விவரம் தற்போது எனக்கு ஞாபகமில்லை. பத்திரங்கள, எத்தனை இருந்தது. வேறு ஆவணங்கள் எத்தனை இருந்தது என குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தற்போது குறிப்பிட்டு சொல்லமுடியாது, ஞாபகமில்லை. எத்தனை வகையான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் எதில் கையொப்பம் செய்தேன் என்றால் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன். அதைதவிர வேறு எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. சோதனை ஜபீதாவில் நான் ஒரு கையொப்பம் செய்தேன். சோதனை ஜபீதா எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் ஒரே பக்கத்தில் தான் எழுதினார்கள். Addl.S.P.திருமதி.சண்முகப்பிரியா அவர்கள் 28.11.2011 அன்றே விசாரித்தார். கலைஞர் கல்லூரி அமைந்துள்ள இடத்தருகில் குடியிருப்புகள் உள்ளனவா என்றால் தற்போது ஞாபகமில்லை. கல்லூரி அமைந்துள்ள பகுதியில் வசிப்பவர்களை எவரையேனும் சாட்சிகளாக அழைத்தார்களா என்றால் அழைக்கவில்லை. கைப்பற்றப்பட்ட 44 ஆவணங்களும் அசல் ஆவணங்களா அல்லது புகைப்பட ஆவணங்களா என்றால் அசல் ஆவணங்கள் ஆகும். நான் தோட்டக்கலையில் பட்டயப்படிப்பு படித்துள்ளேன். ExP12 ன் ஜெராக்ஸ் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக

எழுதியுள்ளது என்றால் சரிதான், சாட்சி தொடர்ந்து விளக்கமளிக்கிறார் கைப்பற்றும் போது அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு ஜெராக்ஸ் எடுத்து விட்டு அசல் ஆவணங்களை தாளாளரிடமே திருப்பி கொடுத்தார்கள் என்று கூறுகிறார். எனது முதல் விசாரணையில் Addl.S.P. என்னை விசாரித்தபோதும் அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு பின்னர் அசல் ஆவணங்கள் தாளாளரிடம் கொடுக்கப்பட்டதாக நான் கூறவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு அதை ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு பின்னர் அசல் ஆவணங்கள் தாளாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாக Exp12 ல் எழுதப்படவில்லை என்றால் சரிதான். 29.11.2011 தேதி நான் Addl.S.P. அலுவலகத்திற்கு சென்றதாகவும், கலைஞர் கருணாநிதி கல்லூரிக்கு சென்றதாகவும் நான் சோதனை ஜபீதாவில் கையெழுத்து செய்ததாக சொல்வதும், பொய் என்றாலும் நான் அலுவலகத்தில் வைத்து போலீசார் கேட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

ExP11 ல் பக்கம் 9 ல் 1 முதல் 36 வரையிலான ஆவணங்களின் நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டு அசல் ஆவணங்கள் அதன் உரிமையாளர் வித்யா கோகுல் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

<u>**குறுக்கு விசாரணை எதிர் தரப்பில்**</u>

ExP12 ல் மறுவிசாரணையில் சொல்லியுள்ள விவரம் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். ExP11 ல் 37 முதல் 44 வரை உள்ள ஆவணங்கள் காசோலை புத்தகங்கள், வங்கி Pass Books ஆகும். ExP11 ல் 37 முதல் 44 ஆவணங்களின் அசல் ஜெராக்ஸ் செய்யப்பட்டு, ஜெராக்ஸை வைத்துக்கொண்டு அசலை தாளாளரிடம் கொடுத்துவிட்டார்கள். அவ்வாறு ExP11 ல் 37 முதல் 44 வரையான ஆவணங்களை அசல் ஆவணம் தாளாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்றால் குறிப்பு உள்ளது. ExP11 ல் பக்கம் -10 ல் மேற்கண்ட குறிப்பு உள்ளது.

PW11

//உத்தரவுப்படி//

Date: 09.10.2020.
அ.த.சா - 4 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

29.11.2011 அன்று நான் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் துணை காவல் கண்காணிப்பு கண்காப்பாளராக பணிபுரிந்து வந்தேன். எனக்கு அந்த சமயத்தில் உயர் அதிகாரி யார் என்றால் காவல் கண்காணிப்பாளர் மேற்கு சரகம் ஆவார். காவல் கண்காணிப்பாளர் மேற்கு சரகத்திடமிருந்து இவ்வழக்கில் நான் பங்கு கொள்ள எழுத்துபூர்வமாக உத்தரவு வந்ததா என்றால் இல்லை, வாய்மொழியாக உத்தரவிட்டார். வாய்மொழியாக என்னவென உத்தரவிட்டார் என்றால் ஒரு வழக்கு சம்மந்தாமாக கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் 28.11.2011 மாலையில் அறிக்கை செய்யும்படி சொன்னார்கள். காவல் கண்காணிப்பாளர் மேற்கு சரகம் யார் யாரை என்னோடு அழைத்து செல்ல சொன்னார் என்றால், அவ்வாறு சொல்லவில்லை அது எனது தன்விருப்ப உரிமையாகும். எனது உயர் அதிகாரியான காவல் கண்காணிப்பாளருக்கு கோயமுத்தூர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளரிடமிருந்து கடிதம் ஏதும் வரப்பெற்றதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 28.11.2011 மாலை சுமார் 6,7 மணிக்கு நான் கோவை வந்து ஊழல்தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் கூடுதல் கண்காணிப்பாளரை சந்தித்து அறிக்கை செய்தேன். அப்போது 29.11.2011 அன்று செயல்பட உள்ள சங்கதி குறித்து என்னை மட்டும் அழைத்து சொன்னார். அப்போது என்னிடம் முதல் தகவல் அறிக்கையின் நகல், எந்த இடத்தில் சோதனை செய்யப்பட வேண்டும் என்ற விவரம் , சோதனை செய்யப்படுவதற்காண அங்கீகார கடிதம், சோதனை ஜபீதா படிவம் ஆகியவற்றை கொடுத்தார். 28.11.2011 தேதி நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் சுமார் அரை மணிநேரம் முதல் ஒரு மணி நேரம் வரை இருந்தேன். மேலே சொன்ன ஆவணங்களை என்னிடம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் உள்ளடக்கத்தை நான் படித்து தெரிந்து கொண்டேன். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடமாக என்ன குறிப்பிடபட்டுள்ளது என்றால், கோயமுத்தூர், திருப்பூர் மற்றும் சென்னை மாவட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது. கோவை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரக்கும் போது 28.11.2011 மாலை அவரது அலுவலகத்தில் அறிக்கை செய்து, முதல் தகவல் அறிக்கை,

அங்கீகார கடிதம், சோதனை ஐபீதா ஆகிய ஆவணங்களை பெற்று கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் 29.11.2011 அன்று என்ன செய்யவேண்டும், எந்த இடத்தில் சோதனை செய்யப்பட வேண்டும் என்ற விவரங்களை தெரிந்து கொண்டேன் என தற்பொழுது நீதிமன்றத்தில் சொல்லும் சங்கதியை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தற்பொழுது சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. எனக்கு கொடுக்கப்பட்ட கு.வி.மு.சா.பிரிவு 165(3) ன் படியான அங்கீகார கடிதத்தின் சோதனை செய்யப்பட வேண்டிய இடமாக கதவு எண். 1996A, கிருஷ்ணா காலனி, திருச்சி ரோடு, சிங்காநல்லூர், கோயமுத்தூர் என்ற இடத்தில் விஜயா மினரல்ஸ், பிரைவேட் லிமிடேட், மேரிஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடேட், நீலகிரி சிமெண்ட் அண்ட் பிரைவேட் லிமிடேட், விஜயலட்சுமி பழனிசாமி சேரிடபுள் டிரஸ்ட் ஆகிய இடங்களை சோதனை செய்ய சொல்லப்பட்டிருந்தது. ExP5 ஆவணத்தில் Material objects and Documents necessary for the purpose of investigation என சொல்லப்பட்டது. கோவை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களால் சோதனை செய்யமுடியாத சூழ்நிலை இருப்பதால் தான் என்னை அதிகாரமளித்திருப்பதாக ExP5 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ExP5 ல் குற்றவியல் நடைமுறைச்சட்டப்படி சோதனை மேற்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ExP5 ல் எந்த தேதியில் சோதனை செய்யவேண்டுமென, குறிப்பாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 28.11.2011 அன்று கோவை ஊழல் மற்றும் தடுப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து ஆவணங்களை பெற்றுக்கொண்டதற்கு தேதியிட்டு கையொப்பம் செய்தேனா, என்றால் அது பற்றி தற்போது நினைவில் இல்லை. 28.11.2011 தேதி நான் கோவை ஊழல் மற்றும் தடுப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றாதாக சொல்வதும், அங்கு முதல் தகவல் அறிக்கை நகல், அங்கீகார கடிதம், சோதனை ஐபீதா ஆகியவைகளை பெற்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது குழுவில் யார் யார் இருந்தார்கள் என்றால், ஆய்வாளர் சதீஸ், காவலர்கள் முருகன், விஜயகுமார், பிரபாகரன் ஆகியோர்கள் இருந்தார்கள். 29.11.2011 தேதி காலை 5.00 மணிக்கு நானும் எனது குழுவினரும் ஊழல் மற்றும் தடுப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அறிக்கை செய்தோம். அப்பொழுது என்னிடம் ஆவணங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. அப்பொழுது அங்கு இரண்டு சாட்சிகளை எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். நான் எனது குழுவுடனும், சாட்சிகளுடனும் சோதனை செய்யப்பட வேண்டிய இடத்திற்கு காலை 7.00 மணிக்கு சென்றோம். சோதனை செய்யப்பட்ட இடம் ஒரே கட்டிடம் ஆகும், அந்த ஒரே கட்டிதத்தில்

மேலே சொன்ன 4 நிர்வாக அலுவலகங்கள் இருந்தன. அந்த கட்டிடத்தில் வேறு அலுவலகமோ, நிறுவனமோ இயங்கி வரவில்லை. திருச்சி ரோட்டிலிருந்து, சோதணை செய்த கட்டிடம் வரை தொடர்ச்சியாக கட்டிடங்கள் உள்ளன என்றால், சோதனை செய்யும் கட்டிடம் இருந்த இடத்தில் விட்டு விட்டு கட்டிடம் இருந்தது. சோதனை மேற்கொள்ளப்பட்ட கட்டிடம் எந்த திசை நோக்கி உள்ளது என்றால், அது தற்போது நினைவு இல்லை. அந்த கட்டிடத்திற்கு சொல்ல ரோடு இருந்ததா என்றால், இருந்தது அந்த ரோடு மண் ரோடு ஆகும். அந்த மண் ரோடு தொடர்ச்சியாக சென்றாதா என்றால், அது நாலாப்பக்கமும் போய்கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தொலைவில் அந்த மண் ரோட்டின் இருபுறமும் கட்டிங்கள் இருந்தன. கதவு எண். 1996A எவ்வாறு அடையாளம் கண்டோம் என்றால் தகவலாளி மூலம் தெரிந்து கொண்டோம். தகவலாளி யார் அழைத்தது என்றால் நான் ஏற்கனவே கோவை ஊழல் தடுப்பு மற்று கண்காணிப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததால் எனக்கு தகவலாளிகளை தெரியும். 2001 ம் வருடத்திலிருந்து 2008 ம் வருடம் வரை கோவையில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். தகவலாளியை நான் அழைத்து செல்லவில்லை, அவர் மூலம் சோதனை செய்யப்பட வேண்டிய கட்டிடத்தின் அமைவிடத்தை தெரிந்து கொண்டேன். மேற்கொண்ட சங்கதியை நான் கூடுதல் கண்காணிப்பாளர்விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சோதனை மேற்கொண்ட கட்டிடம் அமைந்துள்ள பகுதிக்கு சோதனை நாளுக்கு முன்பாக நான் எப்போதாவது சென்றிருக்கேனா என்றால் சென்றிருக்கிறேன். குறிப்பிட்டு எந்த வழக்கு சம்பந்தமாக அந்தபகுதிக்கு ஏற்கனவே சென்றேன் என்றால் அது பற்றி தற்போது என்க்கு நினைவில்லை. சோதனை மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் அமைவிட பகுதிக்கு நான் பரிட்சையமானவன் என தற்பொழுது பொய் சொல்கிறேன் என்றால் அது சரியல்ல.

**கேள்வி** - கு.வி.மு.சா.பிரிவி 100(4) பிரிவின் படி சோதனை மேற்கொள்ளவேண்டிய இடத்திற்கு அருகாமையில் வசித்து வரும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பு மிகுந்த நபர்களை சாட்சியாக காண்பிக்க வேண்டுமென சொல்லப்பட்டுள்ளதா?

**பதில்** - சொல்லப்பட்டுள்ளது. ஆனால், நான் சோதனை செய்யசென்ற போது கட்டிடம் பூட்டப்பட்டிருந்தது. அலுவலக பொறுப்பாளர் உமா, அவருடம் சாய்பிரசாத், அவர்கள் வந்ததால் அவர்கள் முன்னிலையில் சோதனை மேற்கொண்டேன். கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் மதிப்பு மிகு நபர்களை சாட்சியாக அழைக்கவில்லை. (கற்று அறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சட்டம் குறித்த வினாவை சாட்சியிடம் கேட்க வேண்டியதில்லை என்றும் அது வழக்கின் இறுதில் வாதிடப்படவேண்டிய பொருள் என்றும் தனது மறுப்பை தெரிவிக்கிறார் ).

குற்றவிசாரணை பிரிவு 100(4) ன் படி சோதனை மேற்கொள்ளப்படாததால் நான் மேற்கொண்ட சோதனையே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. உமா, சாய்பிரசாத் ஆகியவர்களை சோதனை ஜபீதாவில் சாட்களாக காண்பித்திருக்கிறேனா என்றால் காண்பிக்கவில்லை, சோதனையில் உடனிருந்தார்கள். சாய்பிரசாத், உமா ஆகியோர்கள் எத்தனை மணிக்கு அங்கு வந்தார்கள் என்றால் காலை 9.00 மணிக்கு அங்கு வந்தார்கள். சோதனை காலை 9.00 மணியிலிருந்து தான் துவங்கியதா என்றால், ஆம். உமாவிடமும், சாய்பிரசாதிடமிமும். அர்சுனனிடமும் சோதனை பற்றிய விவரத்தை எடுத்து சொன்னோம், அவர்கள் சோதனைக்கு ஒத்துழைப்பு கொடுத்து ஆவணங்களை எடுத்துகொடுத்தார்கள். வழக்கு சம்பந்தமான தொடர்புடைய ஆவணங்களை கைப்பற்றினோம். வழக்கு சம்பந்மான ஆவணங்கள் என்றால், எதிரிக்கு சம்பந்தமான ஆவணங்கள் என்றால், எதிரியும், எதிரியின் குடும்பத்தாருக்கு தொடர்பான ஆவணங்களை கைப்பற்றினோம். எதிரிக்கு தொடர்புடைய 12 ஆவணங்கள், அவரது மகன் பைந்தமிழ் பெயரிள்ளுள்ள 12 ஆவணங்கள், அர்சுனன் தொடர்புடைய 6 ஆவணங்கள், இந்துக்கு சம்பந்தப்பட்ட 4 ஆவணங்கள், வித்யா கோகுலுக்கு சம்பந்தப்பட்ட 9 ஆவணங்கள், கீதா க/பெ.பைந்தமிழ் சம்பந்தப்பட்டது 3 ஆவணங்கள், திருமதி.தேவகி க/பெ.அர்சுனன், சம்பந்தப்பட்டது 1 ஆவணம், விஜயலட்சுமி அறக்கட்டளைக்கு சம்பந்தபட்டது 4 ஆவணங்கள், விஜய் மினரஸ் சம்ப்பந்தப்பட்டது 2 ஆவணங்கள், இதர சம்பந்தப்பட்ட ஆவணங்களை கைப்பற்றினேன். இதர சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பற்றி முழுவிவரம் புலன் விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும், சோதனை செய்யப்பட்ட இடம் குறித்து வரைபடம் வரையவில்லை. பார்வை மகஜர் தயாரித்தேனா என்றால் சோதனை ஜபீதாவிலேயே பார்வை மகஜர் பற்றிய விவரம் சொல்லப்பட்டுள்ளதால், தனியாக தயாரிக்கவில்லை. சோதனை ஜபீதாவில் கட்டிடத்திற்கு உள்அமைப்பு பற்றி சொல்லியுள்ளோம், கட்டிடத்திற்கு வெளியே உள்ள அமைப்பை சொல்லவில்லை என்றால் சரிதான். ExP7 சோதனை ஜபீதாவில் ஆவணப்பட்டியலில் 73 ஆவணங்கள் பற்றி விவரம் சொல்லியுள்ளது என்றால் சரிதான். A.DDL.S.P விசாரணையில் 73 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது, அந்த ஆவணங்களையும் வீடு, சோதனை ஜபீதா, பார்வை மகஜர் ஆகியவைகளை ஒப்படைத்தேன் என சொல்லியுள்ளேனா என்றால் அது குறித்து தற்போது நினைவு இல்லை. A.DDL.S.P விசாரணையில், 74 வதுஆவணமாக ரூ.12 லட்சத்திற்கான டிமாண்ட் டிராபிட் ன் ஜெராக்ஸ் நகல் மட்டும் எடுத்துக்கொண்டு அசல் டிராபிட்டை அர்சுனனிடம் கொடுத்துவிட்டேன் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை A.DDL.S.P விசாரணையில், சொல்லவில்லை என்றால் ஞபாகமில்லை.

ExP5 ல் ஜெராக்ஸ் நகலை கைப்பற்ற வேண்டுமென உத்தரவில் குறிப்பாக இல்லை என்றால் சரிதான். அது சோதனை செய்யும் அதிகாரி மற்றும் புலனாய்வு அதிகாரி ஆகியோர்கள் அந்த அந்த சூழ்நிலைக்க ஏற்ப முடிவு செய்யும் நிகழ்வாகும். ஏன் அசல் ஆவணங்களை கைப்பற்றவில்லை என்றால் அசல் ஆவணங்கள் தேவையில்லை என்பதால் அப்பொழுது கைப்பற்றவில்லை. ஆவணங்களை எத்தனை மணிக்கு பட்டியலிட்டோம் என்றால் மாலை 6.00 மணிக்கு பட்டியலிட்டேன். யார் பட்டியலிட்டது என்றால் அனைத்தையும் நான் தான் எழுதி பட்டியலிட்டேன். நானும், சோதனை சாட்சிகளாக காண்பிக்கப்பட்ட சாட்சிகளும் சோதனை செய்யததாக சொல்லும் கட்டிடத்திற்கு, இடத்திற்கு செல்லவே இல்லை என்றால் தவறாகும். ExP5 முதல் ExP7 வரை அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 28.11.2011 தேதி நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் முன்னிலையானேன் என சொல்வதும், நானும் எனது குழுவும் மறுநாள் 29.11.2011 மேற்படி அலுவலகத்தில் கூடியதாக சொல்வதும், அங்கிருந்து சோதனை செய்யப்பட வேண்டிய கதவு எண். 1996A கிருஷ்ணா காலனிக்கு சென்று சோதனை மேற்கொண்டதாக சொல்வதும், ஆவணங்களை கைப்பற்றியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

PW4

//உத்தரவுப்படி//